சுதந்திரப் போராட்ட தியாகி கடலூர் அஞ்சலை அம்மாள் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு , சமூக நீதி சத்ய பேரவையின் சார்பில் தலைவர் பொன் குமார் நேற்று கடலூரில் அஞ்சலை அம்மாள் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.இந்த நிகழ்ச்சியில் சமூக நீதி சத்ரியர் பேரவையின் செயலாளர் எஸ் .எம். குமார், அமைப்பு செயலாளர் மதியழகன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் சண்முகம் ,பண்ருட்டி சுப்பராயன், அஞ்சலை அம்மாள் பேத்தி இளவரசி உள்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பிராம்பட்டியில் புதிய பகுதிநேர அங்காடியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 28.05.2025 அன்று திறந்து வைத்தார். உடன் துணைப் பதிவாளர் (பொதுவிநியோகத் திட்டம்) ராஜவேலு மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் பட்டி தொட்டி எங்கும் முத்தமிழறிஞர்

கலைஞர் பிறந்தநாள் விழாவை இல்ல விழாவாக கொண்டாடுவோம்!

வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

செஞ்சி, ஜூன் 2-

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் பட்டித் தொட்டி எங்கும் கலைஞர் பிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாக கழகத் தொண்டர்களின் இல்ல விழாவாக கோலாகலமாக கொண்டாட வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பல்வேறு குடியரசுத் தலைவர்களையும் பிரதம மந்திரிகளையும் உருவாக்கி சுதந்திர தினத்தில் சட்டமன்றதலைமைச் செயலகத்தில் முதலமைச்சர்களுக்கு தேசிய கொடியினை ஏற்றும் உரிமையை பெற்று தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வதுபிறந்தநாள் விழாவைசெம்மொழி நாளாகவும் சீரும் சிறப்புமாக கொண்டாட வேண்டு மெனகழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்கள்மதுரையில் நடைபெற்ற பொதுக் குழு கூட்டத்தில் அறிவுறுத்தி வுள்ளார்கள்.

அந்த வகையில் தமிழ் நாடு அரசின் நிர்வாக வரலாற்றில் பொற்கால ஆட்சியை தந்து விண்ணை முட்டும் சாதனைகளால் தமிழ்நாட்டை வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் சென்று கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றி சரித்திரம் படைத்த சாதனை முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாகவிழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கழகத் தொண்டர்களின் இல்ல விழாவாகவும்,மக்கள் விழாவாகவும்பட்டித் தொட்டி எங்கும் கோலாகலமாக கொண்டாட வேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் கூறுகையில்:

காஞ்சித்தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்கு பின்னால் ஜனநாயக பேரியக்கமான திராவிட முன்னேற்ற கழகத்தை 50 ஆண்டுகாலம் தனது அயராத உழைப்பால் கட்டிக்காத்து திமுக கழகத்தை எஃகு கோட்டையாக்கி கழகத் தொண்டர்களை கண்ணிமை போல் காத்து ஓய்வறியா உழைப்பாளி தாம் போட்டியிட்ட 13 சட்டமன்ற தேர்தலிலும் மகத்தான இமாலய வெற்றி பெற்ற சாதனை நாயகர், 5முறை தமிழக முதலமைச்சராகவும் சிறப்பான முறையில் பார்போற்றும் வகையில் பணியாற்றி தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பின் தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட எண்ணிலா முற்போக்கு சட்டங்களையும், முன்னோடி திட்டங்களையும் ,நிறைவேற்றி தந்து திராவிட சூரியனாக திகழ்ந்த நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாக விழுப்புரம் வடக்கு மாவட்டம் முழுவதும் கழகத் தொண்டர்களின்இல்ல விழாவாகவும் மக்கள் விழாவாகவும் பட்டி தொட்டி எங்கும் கோலாகலமாக கொண்டாட வேண்டுமென்றும்,

நம்முடைய அன்புத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3 அன்று 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி ,மயிலம் ,திண்டிவனம் ஆகிய தொகுதிகள் முழுவதும் ஒன்றியம், நகரம், பேரூர் களிலும் அனைத்து ஊராட்சி கிளைகளிலும் நகர பேரூர் வார்டுகளிலும்கழக இருவண்ண கொடி தோரணங்களைக் கட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர்,தலைவர் தளபதி ஆகியோர் புகழ் பரப்பும் பாடல்களையும் அவர்கள் உரையாற்றிய எழுச்சியான பேச்சுகளையும் ஒளிபரப்பி அந்தந்த கிளைகளில் உள்ள கழக முன்னோடிகளை முன்னிலைப்படுத்தி கழகத்தின் இரு வண்ணக் கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்றும், மேலும்ரத்ததான முகாம், மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம்கள் நடத்துதல், மரக்கன்றுகளை நடுதல், ஏழை எளிய மக்களுக்கு வேட்டி சேலை வழங்குதல், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரண பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத்திட்ட உதவிகளை சிறப்பான முறையில் வழங்க வேண்டும் என்றும், விழுப்புரம் வடக்கு மாவட்டமே விழாக்கோலம் காணுகின்ற வகையில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளைசெம்மொழி நாளாக மிகவும் பிரம்மாண்ட முறையில்ஆண்டு முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும் எனவிழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா!

மாவட்ட செயலாளர் மேயர் ரெ.மகேஷ் அறிக்கை !

கன்னியாகுமரி,ஜூன் 2-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற 2025, ஜூன் 3ம் தேதி, செவ்வாய்க்கிழமை அன்று காலை 9யமணியளவில் எனது தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு வுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பாக கொண்டாடப்படஉள்ளது.

மேலும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் அனைத்து கிளை கழகங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கிட வேண்டும் எனவும், மேலும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழகங்கள், ஊராட்சி கிளை கழகங்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் சார்பாகவும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள், இலவச மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி தங்கும் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்குதல், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும், மேலும் தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கும் வகையில் தெருமுனைக் கூட்டம், பொதுக்கூட்டம், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சி, கட்டுரை போட்டி, பேச்சு போட்டி, இளைஞரணி சார்பாக தெருமுனைக் கூட்டங்களையும், சீரும் சிறப்போடும் எழுச்சியோடும் நடத்தி தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை கூறும் வகையில் கொண்டாட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

மாவட்ட பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிக்கை!

உதகை, ஜூன் 2-

வேலூர்மாவட்ட பொறுப்பாளர் கே.எம்.ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இறுதிவரை திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக இருந்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது கொள்கைகளை காத்து உழைத்து, முதுபெரும் அரசியல் தலைவராக செயலாற்றி வரலாறு படைத்தார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா ஜூன்3ம் தேதி உலக தமிழர்களால் சிறப்புடன் கொண்டாடப்பட உள்ளது

ஜூன்- 3ம் தேதி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழக அலுவலக முன்பு உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு நகர - ஒன்றிய பேரூர் மற்றும் அனைத்து கிளை கழக பகுதிகளிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படங்களுக்கு மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், பல்வேறு நலத்திட்ட உதவிகள், முதியோர் இல்லங்களில் உணவுகள் வழங்கி மிக சிறப்புடன் கொண்டாடிட வேண்டும்.

இதேபோல், ஜூன் மாதம் முழுவதும் ஏழை எளிய மக்கள் பெரிதும் பயனடைந்திடும் வகையில் நலத்திட்டங்கள் வழங்கியும், தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை பொதுமக்களுக்கு கொண்டு சேர்த்திடும் வகையில் பொதுக்கூட்டங்கள், தெருமுனை பிரச்சார கூட்டங்கள், உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை மாவட்டம் முழுவதும் வெகு விமர்சையாக நடத்திட வேண்டும் என மாவட்டத்திலுள்ள கழகத்தினர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் - முத்தமிழ் அறிஞர்

கலைஞர் பிறந்த நாளில் நலத்திட்ட உதவிகள் வழங்கி வணங்கி மகிழ்வோம்!

மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்குமார் எம் எல் ஏ அறிக்கை!

வேலூர், ஜூன் 2-

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 03 அன்று எழுச்சி யோடு கொண்டாடுவோம் என வேலூர் மாவட்ட செயலாளர் தனது அறிக்கையில் பின் வருமாறு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழி.அத்தமிழ் தாயின் மூத்த மகன்,அகவை 14ல் அரசியலில் தடம் பதித்து சமத்துவ பெரியாரின் சுயமரியாதை கொள்கையால் ஈர்க்கப்பட்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணாவை தலைவராக ஏற்றுக்கொண்டு, மூட நம்பிக்கையில் மூழ்கி கிடந்த தமிழ் சமூகத்தை தனது முற்போக்கு சிந்தனையால் தட்டி எழுப்பி,மூட பழக்க வழக்கங்களுக்கு எதிராக மேடை பேச்சாலும் முற்போக்கு எழுச்சி மிகு எழுத்தாலும் சுயமரியாதை சீர்திருத்த சினிமா வசனங்களாலும் தனது எழுது கோலை தலைசாத்தி தமிழர்கள் தலைநிமிரவும், தமிழ் மொழி தரணியெங்கும் தழைத்தோங்கவும்,

தமிழ்நாடு தன்னெழுச்சி பெற்று இந்திய ஒன்றியத்தில் முதன்மைப் பெற்ற மாநிலமாக இன்றும் திகழ எப்போதெல்லாம் தனது தலைமையில் கழக ஆட்சி மலர்கிறதோ அப்போதெல்லாம் முன்னோடி திட்டங்களை தீட்டி அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து முழு வளர்ச்சி பெற,

தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு எண்ணற்ற தொண்டுகள் ஆற்றி தமிழின துரோகிகளை அரசியல் களத்தில் புறமுதுகிட்டு ஓட ஒவ்வொரு நாளும்

ஓவ்வறியாமல் உழைத்து இன்று தமிழ் நாட்டில் நடைப்பெற்று கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசின் தன்னிகரில்லா கழக தலைவர் தளபதி அவர்களின் ஒப்பற்ற தலைவராக தான் ஏற்றுக்கொண்ட அத்தனை பொறுப்புகளிலும் முத்திரை பதித்து கழக இளைஞரணியை இராணுவ கட்டுப்பாட்டோடு வழி நடத்திவரும் மாண்புமிகு உதயநிதிஸ்டாலினின் வழிகாட்டியாகவும், கழக பொதுச்செயலாளர், நீர் வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் அண்ணனாகவும்,

உடன் பிறப்பே எனும் ஒற்றை வார்த்தையால் லட்சோப லட்ச தொண்டர்களின் தலைவராகவும்,எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்து அனைவருக்குமான அரசியலை முன்னெடுத்து சாதனை மேல் சாதனைகளை படைத்து இன்றும் தமிழகத்திற்கு வழிகாட்டி அனைவரின் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளான ஜூன்03 அன்று வேலூர் மாவட்ட திமுக வுக்குட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளில் பிறந்த நாள் கேக் வெட்டியும்,இனிப்பு வழங்கியும்,பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடி ஏதுவாக கழக நாளேடான முரசொலி நாளிதழில் அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல் அட்டவணைப்படி எழுச்சியோடு கொண்டாடிட உரிய நிர்வாகிகள் ஏற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் நடைப்பெற உள்ள அனைத்து நிகழ்வுகளிலும், நாளை 03.06.2025 முற்பகல் 11.00 மணிக்கு வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடப்பெற வுள்ள அறுசுவை அசைவ பிரியாணி மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்விலும் மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர ஒன்றிய நகர பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள்,நிர்வாகிகள்,தலைமை கழக நிர்வாகிகள், மாநில மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் வட்ட வார்டு மற்றும் உர்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக இன்னாள் முன்னாள் முன்னோடிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளரும் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ. பி.நந்தகுமார் எம் எல் ஏ அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீராங்கனை கடலூர் அஞ்சலை அம்மாள் பிறந்தநாள்!

சிலைக்கு வாரியத் தலைவர் பொன்குமார் மாலை அணிவித்து மரியாதை

கடலூர், ஜூன் 2-

காந்தியடிகளால் தென்னாட்டு ஜான்சிராணி என பாராட்டப் பெற்ற சுதந்திரப் போராட்ட வீராங்கனை கடலூர் அஞ்சலை அம்மாள் பிறந்த நாளை ஒட்டி நாளை ஜீன் 1 ஆம் நாள் காலை 10 மணி அளவில் கடலூரில் உள்ள அவரது சிலைக்கு வாரியத் தலைவர் பொன்குமார் அவர்கள் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார். இதற்கான ஏற்பாடுகளை சமூக நீதி சத்திரியர் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

தியாகி அஞ்சலை அம்மாள் இந்திய நாட்டின் விடுதலைக்காக தன் வாழ்க்கையை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட மகத்தான தியாகி. அவர், கடலூர் முதுநகரில், தற்போது சுண்ணாம்புக்கார தெரு என்று அழைக்கப்படும் தெருவில் கடந்த 1890ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதியில் பிறந்தார்.

இளம் வயதிலேயே படிக்கும் பழக்கம் கொண்டிருந்த அஞ்சலை அம்மாள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆர்வம் கொண்டவராக திகழ்ந்தார். அப்போது புதுச்சேரியில் தங்கியிருந்த பாரதியார் கடலூருக்கு இரண்டு முறை வந்து அஞ்சலை அம்மாளை சந்தித்து அவருடைய தேசப்பற்றை ஊக்குவித்தார். சென்னையில் அப்போது நீல் என்ற ஆங்கிலேய கொடுங்கோலனுக்கு வைக்கப்பட்டு இருந்த சிலையை அகற்றக் கோரும் போராட்டத்தில் அஞ்சலை அம்மாள் தனது 11 வயது மகள் அம்மாப் பெண்ணுடன் சேர்ந்து 1927 ஆம் ஆண்டு ஈடுப்பட்டார். இதற்காக அவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

மறுநாள் கணவர் முருகப்படையாட்சியும் கைது செய்யப்பட்டார். ஒரே நேரத்தில் மூன்று பேரும் வெவ்வேறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் ஆறுமாத கர்பிணியாக இருந்த போது உப்புக் காய்ச்சும் போராட்டத்தில் ஈடுப்பட்டதால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பிறகு பேரோலில் வெளியில் வந்து குழந்தையைப் பெற்றுக் கொண்டு மீண்டும் சிறைக்குச் சென்றார். அந்தக் குழந்தைக்கு ஜெயில்வீரன் என்று பெயரிட்டார்.

கடந்த 1937 மற்றும் 1946 ஆகிய இரண்டு சட்டப் பேரவைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி சார்பில் கடலூர்தொகுதியில்போட்டியிட்டு வெற்றிப் பெற்றவர் அஞ்சலை அம்மாள் அவர்கள் என்று குறிப்பிடத்தக்கது.

கரூர் மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய – நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் 30.05.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக மேற்கு மண்டல பொறுப்பாளரும் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி கலந்துகொண்டு, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார். கரூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கமேடு எஸ்.சக்திவேல் வரவேற்புரையாற்றினார். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழகச் செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைத்தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர். ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.